**பொது (பொது-1)த் துறை,**
**தலைமைச் செயலகம்,**
**சென்னை-9.**

## அறிவிப்பு

வீர, தீர செயல்களுக்கான “அண்ணா பதக்கம் ஒவ்வொரு ஆண்டும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், குடியரசு தின விழாவின் போது வழங்கப்படுகிறது. வீர, தீரச் செயல் புரிந்த தமிழகத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே இப்பதக்கத்தினைப் பெறத் தகுதியுடையவராவர். பொதுமக்களில் மூவருக்கும், அரசு ஊழியர்களில் மூவருக்கும் இப்பதக்கங்கள் வழங்கப்படும். பதக்கம் பெற வயது வரம்பு ஏதுமில்லை. இவ்விருது ரூ.1,00,000/- (ஒரு இலட்சம் மட்டும்)-க்கான காசோலை, ஒரு பதக்கம் மற்றும் தகுதியுரை ஆகியவை கொண்டதாகும்.

2. 2021- ஆம் ஆண்டு வழங்கப்படவுள்ள பதக்கத்திற்குத் தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் () வீர, தீர செயல்கள் மற்றும் அவை தொடர்பான ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவோ அல்லது https://awards.tn.gov.in/ என்ற இணைய தளம் மூலமாகவோ அரசு முதன்மைச் செயலாளர், பொதுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-600009 அவர்களுக்கு 14.12.2020-க்கு முன்பாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். உரிய காலத்திற்குள் பெறப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். பதக்கம் பெறத் தகுதியுள்ளவர், இதற்கென அரசால் நியமிக்கப்பட்ட தேர்வுக் குழுவால் தெரிவு செய்யப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 26.01.2021 குடியரசு தினத்தன்று பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படுவர்.

**ப. செந்தில்குமார்**
**அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)**

**Public (General.1) Department,**
**Secretariat, Chennai-600009.**

## NOTIFICATION

The Government of Tamil Nadu has instituted the 'Anna Medal for Gallantry' for Civilians/Government Servants for their conspicuous acts of gallantry in saving life, property etc. The applicants belonging to Tamil Nadu along are eligible for getting this award. Anna Medals for Gallantry awarded in a year shall be on an average of six medals, with three (3) medals for general public and three (3) for Government servants. There is no age limit for receipt of the medal. This award consists cheque for Rs.1,00,000/- (Rupees one lakh only), a medal and a citation.

2. The Nominations are called for 'Anna Medal for Gallantry' award for the year 2021. The nominations accompanying relevant documents for the conspicuous acts of gallantry should reach the Principal Secretary to Government, Public (General-I) Department, Secretariat, Chennai-600009 along with the recommendation of the District Collector concerned or through online mode https://awards.tn.gov.in/ on or before 14.12.2020. The applications which are not received within the prescribed time will be rejected. The awardees will be selected by the selection committee constituted by the Govt. The medal will be presented to the awardee by the Hon'ble Chief Minister during the Republic Day Celebrations on 26th January, 2021.

**P. SENTHILKUMAR**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT (FAC)**